| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 23/2018 |
| **DATE** | : | **03.01.2025** |
| **NAME** | : | மணவாளன் |
| **FATHER'S NAME** | : | வரதப்பிள்ளை |

**வா.சா.1 குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்டுள்ள சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்றால் சரிதான். பாகப்பிரிவினை படி எனது சகோதர , சகோதரிகளுக்கும் எனக்கும் பாத்தியமான சொத்தாகும். என்னுடைய அம்மாவின் சொத்து பாகப்பிரிவினையில் காட்டப்படவில்லை. கூட்டுக் குடும்ப சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்கண் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரம் 2009ம் ஆண்டு நானும் எனது குடும்பத்தினரும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ–1 பாகப்பிரிவினை பத்திரத்தில் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்று காணப்படவில்லை என்றாலும் பிதுராஜ்ய சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் தந்தையாருடைய சொத்தை தான் பிதுராஜ்ய சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்துக்களை தவிர இதர சொத்துக்கள் உண்டு என்று பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் என்னுடைய தந்தையாருடைய சொத்தும் என்னுடைய சொத்தையும் பற்றி மட்டும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். மற்ற சொத்துக்கள் இருந்த விவரத்தை வா.சா.ஆ–1ல் ஏன் குறிப்பிடவில்லை என்றால் என்னுடைய தந்தையாரின் சொத்தையும் என்னுடைய சொத்தையும் மற்றும் பாகப்பிரிவினை செய்து கொண்டதால் தான் அவ்வாறு குறிப்பிடவில்லை. பத்திரத்தில் கண்டுள்ள 1984, 1985 ஆண்டுகளில்

தாயார் மற்றும் தந்தையார் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த கிரையப் பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்தின் டி–ஷெட்யூல் பகுதி எனது சகோதரர் ஜோதி அழகு என்பருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் நான் தான் பாகப்பிரிவினை அவருக்கு செய்து கொடுத்தேன். டி–ஷெட்யூலில் கண்டுள்ள சொத்து பத்திரப்படி என் தந்தையார் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. ஜோதி அழகு தற்போது காலமாகிவிட்டார். ஜோதி அழகு என்பவருக்கு என் அம்மா மட்டும் தான் சட்டப்படி வாரிசுதாரர் என்றால் சரிதான். என் அம்மா தான் வாரிசுதாரர் என்ற வகையில் ஜோதி அழகிற்கு சொந்தமான சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்க அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். ஜோதி அழகிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து 1984ல் என் அப்பா வரதப்பிள்ளை பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் 1984ல் என் தந்தை கிரையம் வாங்கிய சொத்து மற்றும் என் தந்தை இறந்த பின்பு நான் கிரையம் வாங்கிய சொத்தும் உள்ளது. தற்போது எனக்கு 52 வயதாகிறது. என் தந்தை இந்த சொத்தை கிரையம் வாங்கியபோது எனக்கு 14 வயது இருக்கும். அந்த சமயத்தில் எனக்கு வருமாணம் வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயாரான 1ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்டு இருந்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். 1991ல் என் தந்தையார் இறந்த பின்பு மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறு 1991லேயே மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்ற நிலையில் 2009ம் வருடம் பாகப்பிரிவினை தாயாருடன் ஏற்பட்டது என்றால் என் அம்மாவிற்கு செலவிற்கு பணம் தேவைப்பட்டது அதனால் அவரையும் சேர்த்து பாகப்பிரிவினை செய்து கொண்டோம். மனநிலை பாதிக்கப்பட்டவருடன் செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று அறிவிப்பதற்கு எனக்கு

ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது. அவ்வாறு எனது தாயார் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதை நிருபிப்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் 1991 ற்கு பிறகு எனது தாயார் மனநிலை பாதிக்கப்பட்டது 2009 ம் வருடம் மனநிலை சரியாகிவிட்டது பின்பு பத்திரம் எழுதும் போது அவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டதா என்றால் அவர் 1991 ல் இருந்தே மனநிலை பாதிக்கப்பட்டு தான் இருந்தார். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை வா.சா.ஆ–1 ன் படி தற்போது வரை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். ஜோதி அழகிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் காலம் வரை அவர் அனுபவித்து வந்தார் என்றாலும் அவருக்கு பின்பு எனது தாயார் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் என் தாயாருக்காக பார்த்து வந்தேன். 2017 தான செட்டில்மெண்ட் படி 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக தான் அனுபவித்து வருகிறோம். எனது பிராதில் எனது தாயாரை பயமுறித்து தான் சொத்தை எழுதி வாங்கினார் என்று குறிப்பிடும் நிலையில் அவ்வாறு பயமுறித்து எழுதி வாங்கிக் கொண்டார் என்பதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்த போது காவல்நிலையத்தில் இது சிவில் வழக்கு என்று தெரிவித்ததால் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். அவ்வாறு என் தாயாரை பயமுறித்து எழுதி வாங்கியதற்காக எனது வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது மட்டும் தான். அசல் வழக்கு எண். 136/2016 கண்டுள்ள சொத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அந்த அசல் வழக்கு எண். 136/2016 ல் கண்டுள்ள சொத்தை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் தான்

அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து குறித்து நான் வில்லங்கம் எதுவும் எடுத்து பார்க்கவில்லை. ராதாகிருஷ்ணன் என்பவர் வழக்கு சொத்தினை நிதி நிறுவனத்திற்கு அடமானம் வைத்து மீட்டு மீண்டும் நிதி நிறுவனத்திற்கு அடமானம் வைத்திருக்கும் விவரம் எனக்கு தெரியும், கேள்விபட்டிருக்கிறேன். எப்போதில் இருந்து தெரியும் என்றால் 2,3 மாதங்களுக்கு முன்பு தெரியும். நான் சொல்வது போல் இந்த சொத்து கூட்டுக் குடும்ப சொத்து இல்லை என்றாலும் வரதப்பிள்ளையின் சொத்து என்றால் சரியல்ல, வரதப்பிள்ளை மற்றும் என்னுடைய சொத்தாகும். இந்த சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் சேர்த்து மொத்த சொத்திற்கும் எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்து கொண்டு அதில் டி–ஷெட்யூல் சொத்து ஜோதிஅழகிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜோதி அழகு இறந்த பின்பு அவருடைய சொத்தை எனது தாயார் 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தார் என்றாலும் அந்த விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. எழுதி வைத்து ஒரு ஆறு மாதம் கழித்து வில்லங்கம் போட்டு பார்த்த பின்பு தான் தெரிந்தது. அதன் பின்பு தான் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என் தாயார் ஜோதி அழகின் சொத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தது செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் 1991ல் இருந்தே மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால் 2009ம் வருடம் எங்கள் குடும்பத்தில் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரமே செல்லாது என்றாலும் பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்றுக் கொண்டு அதற்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட பத்திரம் செல்லாது என்று நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது தாயாரை அச்சுறுத்தியோ, பயமுறித்தியோ பத்திரம் எழுதி வாங்கியிருந்தால் அது குறித்து எனது தாயார் தான் புகார் கொடுக்க வேண்டும் என்றாலும் நான் புகார் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட 2009

பாகப்பிரிவினை பத்திரம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதால் எனது தாயாருக்கு மனநிலை சரியில்லை என்று நான் குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.